# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,  DHINATH DHALAM Tamil & English daily Paper  நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 127 | செவ்வாய்க்கிழமை Tuesday | 04.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


### ஸ்ரீபெரும்புதூர், ஒரகடத்தில் உள்ள

## தனியார் தொழிற்சாலைகளில் முதலமைச்சர் விஜய் ஆய்வு



தமிழகத்தில்தொழில்துறைவளர்ச்சியை ஊக்குவிக்கவும், புதிய உலகளாவிய முதலீடுகளை ஈர்க்கவும் முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஒரகடம்சிப்காட்தொழில் வளாகங்களில் நேரடி ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

செயிண்ட் கோபைன் கண்ணாடி ஆலையில் ஆய்வு:

ஸ்ரீ பெரும்புதூர் இருங்காட்டுக்கோட்டை மற்றும் மாம்பாக்கம் பகுதியில் செயல்பட்டு வரும் பிரான்ஸ் நாட்டின் பன்னாட்டு நிறுவனமான 'செயிண்ட் கோபைன்' உலகத்தரம் வாய்ந்த கண்ணாடி தயாரிப்பு வளாகத்தில்தனது முதல் ஆய்வை முதலமைச்சர் மேற்கொண்டார்.

தமிழக அரசுடன் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி இந்த ஆலை மிகப்பிரம்மாண்டமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அங்குதயாரிக்கப்படும் அதிநவீன கண்ணாடி உற்பத்திப் பிரிவுகளை முதலமைச்சர் நேரில் பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் விரிவாகக் கேட்டறிந்தார்.

முதலமைச்சரின் வருகையை ஒட்டி, அப்பகுதியின் இருபுறமும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் பொதுமக்களும்திரண்டு நின்று அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கண்ணாடி ஆலை நிறுவன ஆய்வை முடித்துவிட்டு,அதனைத் தொடர்ந்து ஒரகடம் பகுதியிலேயே அமைந்துள்ள பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான ரெனால்ட்-நிசான் தொழிற்சாலைக்கும் முதலமைச்சர் விஜய் நேரில் சென்று பார்வையிட்டார்.

முதலமைச்சர் விஜய்க்கு அங்கிருந்த அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

அடுத்த இலக்கு: ஒரகடம் 'டெய்ம்லர் இந்தியா' ஆலை:

முதலமைச்சர் விஜய் அடுத்ததாகஒரகடம்சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் அமைந்துள்ள 'டெய்ம்லர் பஸஸ் இந்தியா' மற்றும் 'டெய்ம்லர் இந்தியா வர்த்தக வாகனங்கள்' உற்பத்தித் தொழிற்சாலைக்கு ஆய்வுக்காக விரைந்துள்ளார்.

சுமார் 400 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தத் தொழிற்சாலை இந்தியாவின் மிகப்பிரம்மாண்டமான வணிக வாகன உற்பத்தி மையங்களில் ஒன்றாகும்.

உலகப் புகழ்பெற்ற 'பாரத்பென்ஸ்' மற்றும் 'மெர்சிடிஸ்-பென்ஸ்' முத்திரையிடப்பட்ட நவீன பஸ்கள், கனரக லாரிகள் மற்றும் பஸ் சேஸ்கள் இங்கு சர்வதேச தரத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தமிழகஅரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு செயல்பட்டு வரும் இந்த ஆலையின் உற்பத்தித் திறன், எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் மற்றும்தொழிலாளர்நலன்கள் குறித்து முதலமைச்சர் விஜய் அடுத்ததாகநேரில்ஆய்வு செய்ய உள்ளார்.

தமிழகத்தை இந்தியாவின் முதன்மை முதலீட்டு மையமாகமாற்றுவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தித் திறனை நேரில் மதிப்பீடு செய்வதன் மூலமும், தொழில்துறை உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலமும் மாநிலத்தில் லட்சக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கமுதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசுதீவிரமாகச்செயல்பட்டு வருகிறது.

## "விவசாய விரோதி த.வெ.க. ஆட்சியால் டெல்டாவில் சோகம்" தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கண்டனம்



சென்னை: 'ஜூன் 12 வந்து சேர்ந்திருக்க வேண்டிய காவிரி நீர் ஆகஸ்ட் பிறந்தும் வரவில்லை. ஆடி பதினெட்டில்பொங்கிவரும்புதுப்புனலை வரவேற்ற காவிரிக்கரையின் மைந்தர்கள் விவசாய விரோதி விஜய் ஆட்சியின் சோம்பேறித்தனத்தால் சோகத்தில் மூழ்கியுள்ளனர்' என திமுக தலைவர் ஸ்டாலின்தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டசமூகவலைதளப் பதிவில், "காவிரி விவசாயிகளுக்காக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தஞ்சையில் திரண்டது திமுக. உழவர் பெருமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் போராட்டம் பெருகும். காவிரி பெருக்கெடுக்க வேண்டிய ஆடிப்பெருக்கு நாளில் டெல்டா விவசாயிகள் ஆதங்கம் பெருக்கெடுக்கப் போராடி வருகின்றனர்.

விவசாயப் பெருங்குடி மக்களின் உணர்வுகளை உரக்கச் சொல்லும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழமைக் கட்சித் தலைவர்கள் ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி, நெல்லை முபாரக் ஆகியோருக்கும்,அக்கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட தோழர்களுக்கும், பல்வேறு விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூன் 12 வந்து சேர்ந்திருக்கவேண்டியகாவிரி நீர் ஆகஸ்ட் பிறந்தும் வரவில்லை. ஆடி பதினெட்டில் பொங்கி வரும் புதுப்புனலை வரவேற்ற காவிரிக்கரையின் மைந்தர்கள்,விவசாயவிரோதி விஜய் ஆட்சியின் சோம்பேறித்தனத்தால் சோகத்தில் மூழ்கியுள்ளனர். தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்து ஒரு வார்த்தை கூட பேசாத முதல்வரை தமிழ்நாடு இப்போதுதான் பார்க்கிறது. அண்டை மாநிலத்தில் திரைப்படம் ஓடுவதற்காக நம் விவசாயிகளின் வாழ்க்கையையா அடகு வைப்பீர்கள்? முழுக் கடன் தள்ளுபடி என வாழைப்பழம் போல வாக்குறுதி தந்து வெற்றி பெற்றுவிட்டு, விவசாயிகளை ஏமாற்றிய மோசடி ஆட்சியாக இந்தத் த.வெ.க. ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது.

மேகேதாட்டு அணை கட்டியே தீருவோம் என அடம் பிடிக்கும் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் துடியாய்த் துடிக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று கர்நாடகத்தில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் பற்றிய செய்திகளைப் பார்த்தாரா? இங்கு அதேபோல் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட முதல்வருக்கு நேரமில்லையா?

விவசாயிகளைச் சந்திக்காமல் புறக்கணித்துவிட்டு, வேளாண் பட்ஜெட்டைத்திருப்பதிக்குத் தூக்கிக் கொண்டு சென்றால் உங்கள் பாவங்கள் போய்விடுமா? நாக்பூரில் நம் விவசாயிகள் கைது செய்யப்பட்டதற்குக் கூட கண்டனம் தெரிவிக்காமல்,கள்ள மவுனம் காக்கிறார் திரையில் தன்னுத்து விவசாயியாக வேடம் தரித்தவர்.

விவசாயிகளை இனியும் வஞ்சிக்காமல் த.வெ.க. அரசு வாக்குறுதியளித்தபடி முழுக் கடன் தள்ளுபடிசெய்யவேண்டும். குறுவை சிறப்பு நிவாரணத் தொகுப்பு வழங்கி,டெல்டா மாவட்டங்களைவறட்சி மாவட்டங்களாக அறிவித்திட வேண்டும். காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைக் காற்றில் பறக்க விடாமல் தீவிரமாகச் செயல்பட வேண்டும். அதுவரை கழகத்தின் போராட்டம் தொடரும்' என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## "சசிகலா, தினகரனை அதிமுகவில் சேர்க்க வேண்டும்" எஸ்.பி. வேலுமணி மீண்டும் போர்க்கொடி



சென்னை: "சசிகலா, டிடிவி தினகரன் உள்ளிட்டவர்களை மீண்டும் கட்சியின் இணைத்து அதிமுகவை பலப்படுத்த வேண்டும். சொன்ன வார்த்தையை காப்பாற்றி பழைய பொறுப்புகளை வழங்கி, எல்லோரையும் ஒன்று சேர்த்தால் மட்டுமே புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்வோம்" என அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் பழநி தொகுதி அதிமுக எம்எல்ஏ ரவி மனோகரன் சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா இன்று நடைபெற்றது. காலையில் நடந்த நிகழ்ச்சியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆதரவாளர்களான முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் பரமசிவம் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர்.அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

அவர்கள் நிகழ்ச்சியை முடித்துவிட்டு சென்ற பிறகு, முன்னாள் அமைச்சர்கள் சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி, நத்தம் ஆர். விசுவநாதன், கே.பி. அன்பழகன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

அதன்பின்னர் எஸ்.பி.வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், சி.வி. சண்முகம் ஆகியோர் இன்று கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய எஸ்.பி.வேலுமணி, "ஒரு மாத காலத்திற்கு முன்னால் எங்களுக்கு பொதுச் செயலாளர் பொறுப்புக்களை அறிவித்தார். அப்போதே தெளிவாக ஒரு கடிதத்தில் பத்து பேர் கையெழுத்திட்டு, எங்களுக்கு கொடுத்த பதவிகளை வேண்டாம், நாங்கள் உறுப்பினர்களாக இருக்கிறோம் என்று சொல்லிவிட்டோம்.

கட்சிக்காக எம்ஜிஆர், ஜெயலலிதா காலம் தொட்டு அதிமுக ஆட்சிக்கு வர உழைத்தவர்கள், எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராக வர உழைத்தவர்கள், ஜா., ஜெ., அணி பிரிந்தபோது எப்படி சேர்ந்தார்களோ, ஓ.பி.எஸ்., பிரிந்தபோது எப்படி நடந்துகொண்டார்களோ அதேபோல் பழைய பதவிகளை தருவதாக சொன்னதால் தான் சேர்ந்தோம். இதுவரை அதை செய்யவில்லை. பழனிசாமி வாக்குறுதி அளித்தபடி எங்களுக்கு மீண்டும் பழைய பொறுப்புகளை வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தோம். அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பொதுக் குழுவை கூட்டி தேர்தல் தோல்வியை பற்றி ஆராய வேண்டும் எனகோரிக்கைவைத்திருந்தோம். அதேபோல அதிமுகவில் எந்த ஒரு முடிவை எடுக்கவும் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை வைத்திருந்தோம்.அவை எவற்றையும் இதுவரை செய்யவில்லை.

அதே நேரத்தில் 200-க்கும்மேற்பட்ட பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தினமும் நிறைய பேரை கட்சியில் இருந்தும் நீக்கி வருகின்றனர். அதிமுகவிலிருந்து பிரிந்து போனவர்கள், நீக்கப்பட்டவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்க வேண்டும். சசிகலா, டிடிவி தினகரன் உள்ளிட்டவர்களை மீண்டும் கட்சியின் இணைத்து அதிமுகவை பலப்படுத்த வேண்டும்.

இன்று கட்சி மூன்றாவது இடத்திற்கு சென்றுவிட்டது. திமுக கூட செல்ல அதிமுக முடிவுசெய்ததால் தான் நாங்கள் தவெகவிற்கு ஆதரவு கொடுத்தோம்.

சொன்ன வார்த்தையை காப்பாற்றி பழைய பொறுப்புகளை வழங்கி, எல்லோரையும் ஒன்று சேர்த்தால் மட்டுமே புதிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்வோம். அதுவரை அதிமுகவில் உறுப்பினராக இருந்து எங்கள் வேலையை செய்வோம். எங்கள் எம்எல்ஏ வேலையை சிறப்பாக செய்வோம். எல்லோரையும் அனுசரித்து செல்லாமல் எப்படி கட்சி பலமடையும், எப்படி மீண்டும் ஆட்சியை பிடிக்க முடியும்" என்றார்.

தொடர்ந்து முன்னாள் அமைச்சர் நத்தம் ஆர். விசுவநாதன் கூறுகையில், "இந்தியாவில் மூன்றாவது பெரிய கட்சியாக அதிமுகவை ஒப்படைத்துவிட்டு சென்றார் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. எடப்பாடி பழனிச்சாமி பொறுப்பேற்ற பிறகு அதிமுகவிற்கு வளர்ச்சியா அல்லது தளர்ச்சியா என்பதை அவர் தான்சிந்திக்கவேண்டும். கட்சி வளர்ச்சிக்கான ஆலோசனைகளை சொன்னோம். அதை அவர் கேட்கவில்லை, காலம் பதில் சொல்லும்" என்றார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில்

# இசை பயிற்சி முகாம்: இசையைக் கற்றுக்கொண்டால் வாழ்க்கை வளமாகும் – இசை ஆசிரியர்கள் வலியுறுத்தல்



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவர்களுக்கான இசைப் பயிற்சி முகாம் உற்சாகமாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமையாசிரியர் லெ. சொக்கலிங்கம்தலைமை தாங்கினார்.மாணவி நந்தனா வரவேற்புரை வழங்கினார்.

இசை ஆசிரியர்கள் செந்தில்குமார் மற்றும் சாந்தி மாணவர்களிடம் இசையின் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினர். அவர்கள் பேசுகையில், "இசையைக் கற்றுக்கொள்வது வாழ்க்கையை வளமாக்கும். இசை என்பது பொழுதுபோக்கு மட்டுமல்ல; அறிவாற்றல் மற்றும் சிந்தனைத் திறனை மேம்படுத்தும் சிறந்த கலை. ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒரு இசைக் கருவியையாவது முறையாகக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்றனர். மேலும், இசைப் பயிற்சி பெறுவதால் மூளையின் செயல்திறன் அதிகரிப்பதுடன், இடது மற்றும் வலது மூளைகளும் ஒருங்கிணைந்து செயல்படும் திறன் மேம்படுகிறது. குறிப்பாக, பியானோ வாசிப்பது மூளையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. தொடர்ந்து பல ஆண்டுகள் இசைப் பயிற்சிமேற்கொள்வதன் மூலம் இசைத் துறையில் சிறந்த முன்னேற்றங்களை அடைய முடியும் என்றும்அவர்கள் எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில் மாணவி ரித்திகா நன்றியுரை வழங்கினார்.

# உளுந்தூர்பேட்டை அருகே உள்ள எலவனாசூர்கோட்டையில் பேருந்தில் கஞ்சா கடத்தி வந்த இளைஞரை கைது

## பதுக்கி வைத்திருந்த 13 கிலோ கஞ்சா பொட்டலங்களை பறிமுதல் செய்தனர்





திருக்கோவிலூரில் இருந்து எலவனாசூர்கோட்டை வழியே உளுந்தூர்பேட்டை நோக்கி செல்லும் பேருந்து ஒன்றில் கஞ்சா கடத்திச் செல்லப்பட்டு வருவதாக போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் உளுந்தூர்பேட்டை மதுவிலக்கு காவல் ஆய்வாளர் விவேகானந்தன் தலைமையிலான தனிப்படை போலீசார் எலவனாசூர்கோட்டை பேருந்து நிறுத்தம் பகுதியில் அந்த வழியே சென்ற பேருந்துகளை நிறுத்தி சோதனை இத்தனர் அப்போது அந்த வழியே வந்த ஒரு பேருந்தில் சந்தேகப்படும் படியாக பயணம் செய்த ஒரு இளைஞரைபிடித்துவிசாரணை நடத்தினர் அதில் அவர் கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே உள்ள குலமுருட்டிதபுவனம் கிராமத்தைச் சேர்ந்த ஐயப்பன் வயது 28 என்பது தெரியவந்தது அவர் போலீசாரிடம் முன்னுக்கு பின் முரணாக கூறியதால் சந்தேகம் அடைந்த போலீசார் அவரிடம் தீவிர விசாரணை செய்தனர் அப்பொழுது அவர் சென்னைக்கு கிடைத்து செல்வதற்காக திருக்கோவிலூரில் இருந்து உளுந்தூர்பேட்டை செல்லும் பேருந்தில் சென்றதாகவும் அவர் 13 கிலோ கஞ்சாப் பொட்டலங்கள் பதுக்கி வைத்திருப்பதாகவும் கூறினார் எதை எடுத்து ஐயப்பனை கைது செய்த போலீசார் அவர் பதுக்கி வைத்திருந்த 13 கிலோ கஞ்சா பொட்டலங்களை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து உளுந்தூர்பேட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் சிறையில் அடைத்தனர்..

# கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளுக்கு பணம் வழங்காததை கண்டித்து சாலை மறியல் போராட்டம்



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே மின்னல் சித்தாமூர் ஊராட்சியில் செயல்பட்டு வந்த மத்திய அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு நான்கு மாத காலம் ஆகியும் பணம் வராததால் தொழுப்பேடு ஒரத்தி சாலையில் 50-க்கும் மேற்பட்டோர் அரசு பேருந்தை சிறைபிடித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பவ இடத்திற்கு வந்த ஒரத்தி காவல்துறையினர் சாலை மறியலில் ஈடுபட்ட விவசாயிகளை கைது செய்து விடுவேன் என மிரட்டியதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு வருகிறது.


இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பணம் வரவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம்: அஞ்சுகிராமம் அருகே மயிலாடி சந்திப்பில் உள்ள சுடலைமாடசாமி கோவிலில் உண்டியலை உடைத்து ரூ.5 ஆயிரம் கொள்ளையடிக்கப்பட்டது. காலையில் கோவிலை திறந்த பூசாரி பூட்டு உடைக்கப்பட்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். கோவில் தலைவர் நாகராஜன் அளித்த புகாரின் பேரில் அஞ்சுகிராமம் போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர்.கண்காணிப்பு கேமரா காட்சிகளையும் ஆய்வு செய்தனர். விசாரணையில் அமராவதிவிளையைச் சேர்ந்த மரியசேவியர் கொள்ளையில் ஈடுபட்டது தெரியவந்தது. தலைமறைவாக உள்ள அவரை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.



ஆடிப்பெருக்கை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு வழிபாடுகள், பூஜைகள் தொடர்ந்து நடைப்பெற்று வருவதால் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர் சந்தையில் பூக்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இதனால் மல்லிப்பூ கிலோ 1000 ரூபாய்க்கும், பிச்சிப்பூ 600 ரூபாய்க்கும்,முல்லை கிலோ 600 ரூபாய்க்கு விற்பனை. அதேபோன்று அரளிப்பூ ரூபாய் 300க்கும், சம்பங்கி ரூபாய் 200க்கும், என வண்ண வண்ண பூக்களின் விலையும் அதிகரித்துள்ளது. வரும் நாட்களில் தொடர்ந்து ஆடி மாத வழிபாடுகள் ஆலயங்களில் நடைப்பெற இருப்பதால் பூக்களின் விலை உயர் கூடும் என பூ வியாபாரிகள் தெரிவித்துள்ளனர் .



★தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 3.8.26 நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைகளையும் நாள்கூட்டத்தில்மாவட்டஆட்சியர்திரு.ரஞ்ஜீத்சிங்,இ.ஆ.ப.,அவர்கள்பொதுமக்களிடம்இருந்துகோரிக்கைமனுக்களை பெற்றுக் கொண்டார்.

### இசைத்தமிழ் அறிஞர் ஆபிரகாம் பண்டிதரின் 168 வது பிறந்தநாள் விழா

# தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இந்து நாடார் உறவின்முறை கமிட்டி நாட்டாமை வெங்கடேஷ் மற்றும் உறவின்முறை நிர்வாகிகள் தலைமையில் புகழ் வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி



இசைத் தமிழ் அறிஞர் ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் 168 வது பிறந்தநாள் விழா அவர் பிறந்த ஊரான தென்காசி மாவட்டம் சாம்பவர் வடகரையில் இந்து நாடார் உறவின்முறை கமிட்டி நாட்டாமை வெங்கடேஷ் மற்றும் உறவின்முறை நிர்வாகிகள் தலைமையில் புகழ் வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது

இந்த நிகழ்ச்சியில் சாம்பவர் வடகரை இந்து நாடார் உறவின்முறை நாட்டாமை வெங்கடேஷ் மற்றும் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் மற்றும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு நிர்வாகிகள் ஆபிரகாம் பண்டிதரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினர்

இந்த விழாவில் அகரக்கட்டு லூர்து நாடார் பேசும் போது சாம்பவர் வடகரையில் முத்துச்சாமி நாடார் அன்னம்மாள் அவர்களுக்குமகனாகபிறந்தவர் ஆபிரகாம் பண்டிதர் இந்துவாகப் பிறந்து கிறிஸ்தவராக வளர்ந்து சுருளிமலை சித்தர் கருணாணந்த சுவாமிகளின் சீடராக கடைசி வரை வாழ்ந்தவர்மேலும்தமிழனின் இசை தான் உலகின் மூத்த இசை இதில் இருந்து பிறந்தது தான் கர்நாடக் இசை என்று உலகுக்குஅறிவித்துஏழு இசை மாநாடுகளை நடத்தி நிரூபித்து வெற்றி கண்டவர் பல நாடுகளுக்கும் சென்று இசை ஆராய்ச்சி பற்றி விளக்கம் அளித்து தமிழனின் இசை தான் மூத்த இசை என்று நிரூபித்தவர் புதிய புதிய இசை கருவிகளையும் புதிய புதிய ராகங்களையும் தனது ஆய்வின் மூலம் கண்டுபிடித்தவர் ஆபிரகாம் பண்டிதர்

இவர் எழுதிய கர்ணாமிர்தம் சாகரம் திரட்டு என்ற இசை ஆராட்சி நூல்தான் இன்றளவும் எல்லா இசை பள்ளிகளிலும் முதல் நூலாக மூத்த நூலாக விளங்கி வருகிறது சித்த மருத்துவத் துறையில் பல பதக்கங்களையும் பட்டங்களையும் பெற்றவர்வேளாண்மைதுறையில் பல சாதனைகள் படைத்தவர் செங்கரும்பு கிளிமூக்கு மாங்கா கத்தரிக்காய் போன்ற ஒட்டு ரக காய்கறிகளை கண்டுபிடித்தவர் இதற்காக ஆங்கிலேய அரசிடம் பல விருதுகள் பெற்றவர் ஆபிரகாம் பண்டிதரின் பிறந்தநாளில் அவருக்கு புகழ் வணக்கம் செலுத்துவதில் சாம்பவர் வடகரை இந்து நாடார் உறவின்முறை நிர்வாகிகளும் ஊர் பொதுமக்களும் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகளும் பெருமை கொள்வோம் என்றும்

ஆபிரகாம் பண்டிதரின் பெயரில் சித்த மருத்துவர்களுக்கு வேளாண்மையில்சாதனைபடைத்தவர்களுக்கு மேடை கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா விரைவில் நடைபெறும் என்று பேசினார் இந்த விழாவில் சாம்பவர் வடகரை இந்து நாடார் உறவின் முறைகமிட்டி நாட்டாமை மற்றும் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார் பொருளாளர் சுப்பிரமணியன் செங்கோட்டை ஒன்றிய தலைவர் மணிகண்டன் ஒன்றிய இளைஞரணி தலைவர் கார்த்திகைக் குமார் ஒன்றிய துணை தலைவர்சக்திவேல் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# உளுந்தூர்பேட்டை அருகே மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

உளுந்தூர்பேட்டை அருகே கோட்டையாம்பாளையம் கிராமத்தில் மின்சாரம்தாக்கி 49 வயதுடைய பெண் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே கோட்டையாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவரின் மனைவி அஞ்சலை, இன்று காலை வழக்கம்போல் வீட்டு வாசல் அருகே உள்ள குடிநீர் குழாயில் தண்ணீர் பிடித்துவிட்டு வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்.

அப்போது, வீட்டின் முன்புறம் அமைக்கப்பட்டிருந்த தகரச் சீட் கொட்டகையின் இரும்புத் தூணை தொட்டபோது, அதில் மின்சாரம் பாய்ந்ததால் அவர் தூக்கி வீசப்பட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து, அஞ்சலையை அவரது கணவர் உடனடியாக மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் உளுந்தூர்பேட்டைஅரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். ஆனால், மருத்துவர்கள் பரிசோதித்ததில், மருத்துவமனைக்கு வரும் வழியிலேயே அவர்



உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த களமருதூர் காவல் நிலைய காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், நேற்று இரவு வீசிய பலத்த காற்றின் காரணமாக வீட்டிற்கு சென்ற மின் கம்பி அறுந்து, தகரச் சீட் கொட்டகையின் மீது விழுந்ததால் இரும்புத் தூணில் மின்சாரம் பாய்ந்தது தெரியவந்துள்ளது.

இந்தசம்பவம்தொடர்பாக காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த துயரச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.




தமிழ்நாடு தொண்டு நிறுவனங்கள் கூட்டமைப்பு சார்பில் பிரசாத் லேப் சாலிகிராமம் சென்னையில் ஏழாம் ஆண்டு விருது வழங்கும் விழாவில் தேனி மாவட்ட இணையும் கரங்கள் தொண்டு நிறுவனங்கள் சார்பிலும் பேரிடர் மீட்புக் குழு பயிற்சி உடைகள் மற்றும் ஐடி கார்டு திரு விஜயகுமார் ஐஏஎஸ் அவர்களது கரங்களால் திரு அசோக் குமார் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் தமிழ்நாடு தொண்டு நிறுவனங்களின் தலைவர் உடன் இருந்தார் மேலும் பேரிடர்மீட்பு குழு மாநில தலைவர் கிஷோர் குமார் அவர்களது அணி சிறப்பு விருது மற்றும் பயிற்சி சீருடை சிறப்பு விருந்தினர்கள் கரங்களால் தேசிய பேரிடர் மீட்பு படை திரு.ரத்தினகுமார் அவர்களது கரங்களால் பயிற்சி உடை அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் பவுண்டேஷன் ஆப் பப்ளிக் சோசியல் வெல்பர் டிரஸ்ட் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## ஸ்ரீ லங்கா நாட்டில் 4 நாட்கள் நடைபெற்ற

# ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிகளில் கலந்து கொண்டு பல்வேறு பதக்கங்களையும், விருதுகளையும் பெற்று கோவை திரும்பிய மாணவர்களுக்கு பள்ளியில் நடைபெற்ற பாராட்டுவிழா



ஸ்ரீலங்கா நாட்டில் கடந்த மாதம், 26ம் தேதி துவங்கி, தொடர்ந்து 4 நாட்கள் ஓபன் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றது. இந்த போட்டிகளில் கலந்து கோள்ள இந்தியா, இந்தோனேசியா, மலேசியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்த போட்டிகளில் கலந்து கொள்ள

கோவை ஆவாரம்பாளையம்பகுதியில்உள்ள, ஸ்ரீ விஜய் வித்யாலயா பள்ளியில் செயல்பட்டு வரும் யாசூக்கான் கராத்தே பயிற்சி பள்ளி மாணவர்கள் 6 பேர் கலந்து கொண்டனர்.

இந்த போட்டிகளில் 14 வயதிற்கு உட்பட்ட மாணவியர் பிரிவில் தாரணிகா முதலிடமும், 10 வயதுக்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் ஆராதனா மூன்றாம் இடமிடமும், 9 வயதுக்குட்பட்ட மாணவியர் பிரிவில் நிஹா இரண்டாம் இடமும், 15 வயது மாணவர்களுக்கு உட்பட்ட பிரிவில் சுதேஷ் குமார் மூன்றாம் இடமும்,11 வயது மாணவர்களுக்குஉட்பட்டபிரிவில் சாஸ்தா மூன்றாம் இடமும், 9வயதுக்குட்பட்டோருகான, போட்டோ பிரிவில் கட்டா மற்றும் குமிட்டே பிரிவில் தனிஷ் இரண்டாம்இடம்பிடித்து நமது இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களை விஜய வித்யாலயா பள்ளியின் தாளாளர் கிருஷ்ணன் மற்றும் தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் கராத்தே டெக்னிகல் டைரக்டர் சென்செய், ராஜசேகர், கோவைமாவட்டயாசிக்கான் கராத்தே பள்ளியின் தலைமை பயிற்சியாளர் சென்செய் வரதராஜன் ஆகியோர் இன்று மாணவர்களை பாராட்டினர்நன்றிதெரிவித்தனர்.. தொடர்த்து யாசூக்கான் கராத்தே பயிற்சி பள்ளியின் சார்பாக, மாணவ மாணவியர்களுக்குபயிற்சிகளும் வழங்கபட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓமலூரில் தீரன் சின்னமலைக்கு புகழஞ்சலி: கொங்கு இளைஞர் பேரவை மரியாதை



சுதந்திரப் போராட்டத் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் 221-வது நினைவு தினத்தை முன்னிட்டு, கொங்கு இளைஞர் பேரவை சார்பில் மாநில செயலாளர் வழக்கறிஞர் பி.எஸ்.சுந்தரராஜன் தலைமையில் ஓமலூர் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ளதீரன் சின்னமலை திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள், நாட்டின் விடுதலைக்காக தன்னலமின்றி போராடி வீரமரணம் அடைந்த தீரன் சின்னமலைஅவர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்து வீர வணக்கம் செலுத்தினர். மேலும், இளைஞர்கள் தீரன் சின்னமலைஅவர்களின் வீர வரலாற்றை அறிந்து தேசப்பற்றுடன் செயல்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, கொங்கு இளைஞர் பேரவை நிர்வாகி ஒருவர் தீரன் சின்னமலை வேடமணிந்து கலந்துகொண்டுஅனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். அவரது தோற்றம் நிகழ்ச்சிக்கு வருகை தந்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.இதனைத் தொடர்ந்து, ஓமலூரில் இருந்து சங்ககிரியில் அமைந்துள்ள தீரன் சின்னமலை நினைவிடத்திற்குச் சென்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தி, அவரது தியாகத்தை நினைவுகூர்ந்து மவுன அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் கொங்கு இளைஞர் பேரவை மாவட்டத் தலைவர் சுதாகரன், மாவட்ட செயலாளர் கார்த்திக், கடையம்பட்டி ஒன்றிய செயலாளர் அன்பழகன், மாவட்ட செயலாளர் முருகன், மாவட்ட பொருளாளர் விஸ்வநாதன், கனகராஜ், வேலு உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்தினர்.

## கோவை அவிநாசி சாலையில் உள்ள கே.எம்.சி.எச். மருத்துவமனையில்

# உறுப்பு கொடையாளர்கள் பாராட்டு விழா மற்றும் மரியாதை கல்வெட்டு திறப்பு விழா நிகழ்ச்சி

### சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் கலந்து கொண்டார்




கோவை விமான நிலையம் அருகே உள்ளது, கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை இங்கு,உடல் உறுப்பு கொடையாளர்களை பெருமைப்படுத்தும் விதமாக வாழ்க்கைக்கு பிறகு வாழ்க்கை என்ற தலைப்பிலான உறுப்புக் கொடையாளர்கள் பாராட்டு விழா மற்றும் மறைந்த உறுப்பு கொடையாளர் மரியாதை கல்வெட்டு திறப்பு விழா சுகாதாரத்துறை அமைச்சர் அருண் ராஜ் திறந்து வைத்தார்

இந்தநிகழ்ச்சியில்உடல் உறுப்பு தானம் செய்யப்பட்டவர்கள் காணொளி ஒளிபரப்பப்பட்ட பட்டது. அப்போது உடல் உறுப்பு தானம் செய்த உறவினர்கள் கதறி அழுத காட்சி காண்போரை வேதனை படுத்தியது

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் பேசிய சுகாதாரத்துறை அமைச்சர் அருண் ராஜ் கூறியதாவது..

உடல்உறுப்புதானத்தில் சிறந்து விளங்கும் மாநிலத்துக்கு இந்திய அளவில் அவார்ட் கொடுப்பார்கள் அதன்படி தமிழகம் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது, இறந்தவர்களின் உறுப்பில் கொண்டு தொடர்ந்து உறுப்பு தானம் செய்து வரும் மாநிலத்துக்கு இது வழங்கப்படுகிறது இதில் தமிழகம் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. இந்த விருது வாங்குவதற்காக நான் நாளை டெல்லி செல்கிறேன் இந்தவிருதை உடல் உறுப்பு தானம் கொடுத்த கொடையாளர்களின் குடும்பத்தினருக்கு காணிக்கையாக்கிறேன்,

உடல் உறுப்பு தானம் கொடுக்கப்பட்டால் கொடுக்கப்பட்டவரின் உடல் சிதைந்து விடும் என்ற எண்ணம் பலரிடம் உள்ளது அது அப்படி அல்ல என்பது குறித்த விழிப்புணர்வு அவர்களிடம் ஏற்படுத்த வேண்டும் தேவைக்கு குறைந்த படி தான் நாம் விருப்பமாற்று சிகிச்சை கொடுத்து வருகிறோம்அதற்கானவிழிப்புணர்வுஏற்படுத்தவேண்டும் என்றார். மேலும் சாலை விபத்துகளில் இளைஞர்கள் அதிகமாக இறந்து வருகின்றார்கள், அதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் அதிக விபத்துகள் ஏற்படும் இடங்களை கண்டறிந்து அங்கு முதலுதவி சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள கடைகள் மற்றும் மற்ற இடங்களை ஆராய்ந்து அங்கு சிகிச்சை பெறுவதற்கான வழிவகைகள் தமிழக அரசு சார்பில் செய்யப்பட உள்ளது என கூறினார்.

தொடர்ந்து பேசியவர், முதல் உதவி செய்யக்கூடிய ட்ரெயினிங் ப்ரோக்ராம் குறித்து தமிழக அரசு விரைவில் அறிவிப்பு வெளியிட உள்ளது எனவும்,

Air ஆம்புலன்ஸ் தேவை தமிழகத்திற்கு தேவைப்படுகிறது அது விரைவில் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்தார். அரசு மருத்துவமனைகளில் சுகாதார குறைபாடுகள் உள்ளது, என்ற கேள்விக்கு,நான் ஆய்வு செய்த

மருத்துவமனைகளில், சுகாதாரம் குறைவாக இருந்தது என்பது கடந்த இரண்டு மாதங்களாக வரவில்லை, கடந்த காலங்களில் அவை கட்டுப்படுத்தாத காரணத்தினால்வந்துள்ளது,அதைக் கட்டுப்படுத்த தற்போது வந்துள்ளஅரசுஅனைத்து முயற்சிகளையும் ஏற்படுத்தி வருகிறது. இந்த அரசு நேர்மையான ஊழலற்ற அரசு அதைத்தான் செய்து வருகிறோம் என தெரிவித்ததுடன், தமிழகத்தில்,அரசு மருத்துவமனையில் பணிபுரியும் ஊழியர்கள் குறித்து தொடர்ந்துபுகார்கள் வருகிறது. லஞ்சம் வாங்குவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது மருத்துவத்தை சேவையாக செய்ய வேண்டும் மருத்துவமனை ஊழியர்களுக்கு தெரிவிக்க பட்டு வருகிறது. இதனை மீறும் பணியாளர்களை பணி நீக்கம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் மருத்துவம் பார்க்கும் திட்டம் குறித்தகேள்விக்கு,மருத்துவ காப்பீட்டு திட்டத்தை இன்னும் விரிவுபடுத்துவதற்கான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது அது விரைவில் ஏற்படுத்தப்படும் என தெரிவித்தார்



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில்,பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 2024-25 ஆம் ஆண்டிற்கான சிறந்த விடுதி காப்பாளர் / காப்பாளினிகளாக தேர்வு செய்யப்பட்ட திரு. பா. ராம்ராஜ், திரு. இரா. சரவணக்குமார் மற்றும் திருமதி. மு. வள்ளி ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகையை வழங்கினார்.



ஈரோடு மாநகர் மாவட்டம் இந்துமுன்னணி சார்பாக நேற்று இந்திய நாட்டின் சுதந்திர போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை 221வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கும், கடையெழு வள்ளல்களில் ஒருவரான மாமன்னர் வல்வில் ஓரி திருவுருவ படத்திற்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் S.தேவராஜ் தலைமையில் சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட செயலாளர்கள் வழக்கறிஞர் D.முரளி, பொ.சங்கர், மாவட்ட செயற்குழு உறுப்பினர் க.கவின், ஒன்றிய தலைவர் சின்னசாமி உள்ளிட்ட பொருப்பாளர்கள் கலந்து கொண்டனர்.




1

EXECUTIVE SUMMARY & THE VISIONARY MANDATE



The World Siddha Foundation (WSF) is initializing a historic, high-vibrational ecosystem across 150 acres of land. This project is a multi-dimensional synthesis of ancient Siddha wisdom, monumental architecture, world-class medical tourism, and automated public charity

WSF builds a self-sustaining spiritual infrastructure city. By creating a highly restrictive, ultra-exclusive wellness layer for the top 0.1% of global earners, we generate an indestructible, recurring operational surplus. This surplus completely funds, guarantees, and scales our massive public welfare initiatives—including an eternal 24/7/365 free food kitchen (Annadhana Koodam) and a free state-of-the-art holistic hospital.



# தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் ரூ.3 கோடியில் புதிய விடுதியை அமைச்சர் ஸ்ரீநாத் திறந்து வைத்தார்

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய பணியாளர் குடியிருப்பு வளாகத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதி கூடுதல் கட்டடத்தை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் இக்கல்லூரியில், கடந்த 2017–ஆம் ஆண்டு 33 மாணவியர் தங்கும் வகையில் தரைத்தளத்துடன் விடுதி கட்டப்பட்டது. தற்போது மாணவியர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதால்,கூடுதலாக 80 மாணவியர்கள் தங்குவதற்கு ஏற்ப இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் (ICAR) ரூ.3 கோடி நிதி உதவியுடன் முதல் மற்றும் இரண்டாம் தளங்கள் கட்டப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் 18 அறைகளும், இரண்டாம் தளத்தில் 7 அறைகளும் என மொத்தம் 25 புதிய அறைகள் கட்டப்பட்டுள்ளன. மாணவியர் தங்கும் அறைகளுடன், அவர்கள் படிப்பதற்கும் விளையாடுவதற்கும் ஏற்பப் பல்நோக்கு அறை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைஅரசுச்செயலாளர் அனுஜார்ஜ் தலைமை வகிக்க, மாவட்ட வருவாய் அலுவலர் மூ. குருச்சந்திரன் முன்னிலையில் இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டுப் பார்வையிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சகாயஜோஸ், தூத்துக்குடி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் கு.அ. புஷ்ரா ஷப்னம் மற்றும் துறைசார்ந்தஅரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



விடுதலைப்போராட்ட வீரர் மாவீரன் தீரன்சின்னமலை நினைவு ஆடிப்பெருக்குவிழா 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்டம், அறச்சலூர் ஓடாநிலையில் அமைந்துள்ள மாவீரன் தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி , பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.விஜயலட்சுமி, கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி , வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த. லோகேஷ் தமிழ்செல்வன், ஆகியோர் நேற்று (3.08.2026) மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் (திருப்பூர் வடக்கு) வி.சத்தியபாமா, (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன், (மொடக்குறிச்சி) டி.சண்முகன், (பவானிசாகர்) வி.பி.தமிழ்ச்செல்வி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடியின் வரலாறோ, தெருக்களின் விவரமோ தெரியாமல் அமைச்சர் நிர்மல்குமார் பேசி வருவதாகத் மாநகராட்சி மேயரும் திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஜெகன் பெரியசாமி கடும் கண்டனம்

தூத்துக்குடி மாநகராட்சியில் எத்தனை தெருக்கள், எத்தனை குறுக்குச் சந்துகள் உள்ளன என்று கூடத் தெரியாத அமைச்சருக்கு மாநகராட்சியைப் பற்றிப் பேசத் தகுதியில்லை.

100 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது, அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் உத்தரவின் பேரில் உள்ளாட்சித் துறை அமைச்சர் நேரு 15 நாட்களுக்கு மேல் தூத்துக்குடியிலேயே தங்கி முகாமிட்டுப் பணிகளைச் சீரமைத்தார். பத்திற்கும் மேற்பட்ட அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியும் போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணிகளை மேற்கொண்டதால் ஒரு மாதத்திற்குள் நிலைமை சீரடைந்தது.

அதிமுக ஆட்சிக் காலத்தில் சாதாரண



மழைக்கே 6 மாதங்கள் வரை வெள்ள நீரால் மக்கள் பாதிக்கப்பட்ட வரலாற்றை அமைச்சர் உணர்ந்து கொள்ள வேண்டும். திராவிட மாடல் ஆட்சியில் தூத்துக்குடி மாநகராட்சியில் 4,000 சாலைகள் மற்றும் 53 பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் பெண்களுக்காக மட்டும் 3 பிரத்யேக மகளிர் பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்ட படிப்பகங்களில் பயின்ற நூற்றுக்கும் மேற்பட்டோர் வங்கிப் பணி மற்றும் அரசுப் பணிகளுக்குச் சென்றுள்ளனர். 7 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.பள்ளிகளின் தரம் உயர்த்தப்பட்டு மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும், கோடைகாலத்தில் இருந்த குடிநீர்ப் தட்டுப்பாடு நீக்கப்பட்டு, தற்போது 24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேடையில் உள்ளவர்கள் சொல்லும் தவறான தகவல்களைப் பேசாமல், அமைச்சர் மாநகராட்சியை நேரில் சுற்றிப் பார்த்தால் மக்களின் வளர்ச்சி புரியும். அமைச்சர் பொறுப்பேற்றுள்ள மின்சாரத் துறையிலேயே பல்வேறு குறைபாடுகள் உள்ளன. தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதை முதலில் சரிசெய்ய வேண்டும். தங்களை நிரந்தரப் பணியாளராக அறிவிக்கக் கோரி மனு அளித்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அமைச்சர் எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை. மேலும், தெர்மல் நகர் அனல்மின் நிலையத்திலிருந்து கழிவுச் சாம்பல் கடலில் கலப்பதால் மீன்வளமும் உப்பளமும் பாதிக்கப்படுவதை முதலில் சரி செய்ய வேண்டும்.

எனது தந்தைக்கு 'முரட்டு பக்தன்' என்ற பெயர் எவ்வாறு வந்தது என்று கூட அமைச்சருக்குத் தெரியவில்லை. 7 வயது முதல் ஒரே இயக்கத்தில் இருந்து கட்சியின் வளர்ச்சிக்காகவும் தூத்துக்குடி மாவட்டத்திற்காகவும் பாடுபட்டதால் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவருக்கு வழங்கிய பட்டம்தான் அது. பல கட்சிகளுக்குத் தாவி வந்த நிர்மல் குமாருக்கு அரசியல் வரலாறு பற்றித் தெரியாது என மேயர் ஜெகன் பெரியசாமி அந்த அறிக்கையில் சாடியுள்ளார்.



ஈரோடு மாவட்டம், அறச்சலூர் ஓடாநிலையில் நடைபெற்ற விடுதலைப்போராட்ட வீரர் மாவீரன் தீரன்சின்னமலை அவர்களின் நினைவு ஆடிப்பெருக்குவிழா 2026ல் மாவீரன் தீரன்சின்னமலை அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , கைத்தறி துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர் நேற்று (3.08.2026) சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் பால் மற்றும் பால்வளமேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.விஜயலட்சுமி, கால்நடைத்துறை அமைச்சர் செ.கமலி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் த.லோகேஷ் தமிழ்செல்வன் , மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , சட்டமன்ற உறுப்பினர்கள் (திருப்பூர் வடக்கு) வி.சத்தியபாமா, (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன், (மொடக்குறிச்சி) டி. சண்முகன், (பவானிசாகர்) வி.பி.தமிழ்ச்செல்வி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிரண் ஸ்ருதி , மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு நாட்டு மாடுகள் பாதுகாப்பு குழு மற்றும் ஆதிவனம் இணைந்து நடத்திய "திமில் 2026" காங்கேயம் கால்நடைகளுக்கான அழகுப்போட்டி (02/08/2026) அன்று ஈரோடு மாவட்டம் பெருந்துறை சாலையில் உள்ள A.E.T பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் K.A. செங்கோட்டையன், கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம. விஜய் பாலாஜி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் K.K. ஆனந்த் மோகன், மொடக்குறுச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் தமிழ்செல்வி, திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் சத்தியபாமா ஆகியோர் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற கால்நடைகளுக்கு பரிசுகள் வழங்கினர்.





ஈரோடு தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்துறை தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு. முத்துசாமி அவர்களது முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வருகின்ற 07.08.2026 தேதியில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களின் நினைவு தினத்தை அனுசரிப்பதையொட்டி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது . இக்கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# RSS chief Mohan Bhagwat to engage with Gen Z at Mumbai event, days after Jantar Mantar protest forced a minister out

*Rashtriya Swayamsevak Sangh chief Mohan Bhagwat is scheduled to interact with Gen Z students from over 100 cities across the country on Thursday (July 6), days after the student protests at Jantar Mantar. The youth-led demonstrations forced the resignation of Dharmendra Pradhan as the Union education minister.*

*The interaction between the youth and RSS chief Bhagwat, 75, will take place in Mumbai during an event commemorating the 15th anniversary of India's International Movement to Unite Nations (IIMUN), according to a press release.*

*Over 2,000 high school students are expected to be present during the inaugural ceremony of IIMUN's Annual Championship Conference, which will*



*be held at the Nita Mukesh Ambani Cultural Centre (NMACC). Gen Z and Gen Alpha are demographic groups, segregated according to their birth years – those born from 1997 to 2012 come under the Gen Z umbrella, those from 2013 to 2025 are considered to be Gen Alpha. Gen Z made up a major part of the recent student protests.*

*According to the press release, the participants at the event are between 15 and 19 years of age. Bhagwat's address will mark the beginning of flagship Annual Championship Conference under IIMUN, one of the largest youth-led congregations. The inaugural ceremony will be centred around the theme "The Role of Youth in Uniting the World, the Indian Way." Student participants, representing their schools and colleges, will debate and deliberate on local, national and international issues during the conference.*

*Rishabh Shah, the founder of IIMUN, thanked Bhagwat for accepting the invite, saying this dialogue was needed "more than ever before."*

*"Leadership is not only about guiding the next generation, but also listening to it. At this critical juncture in India's journey, we need this dialogue more than ever before. I am grateful to Mohan Bhagwat ji for accepting our invite to address this gathering at this critical juncture," the release cited Shah as saying.*

## தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்கம் சார்பில்

# அரசியல் ஆளுமைகளுக்கு பாராட்டு விழாவில் மாநிலங்களவை உறுப்பினர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் பங்கேற்பு

தூத்துக்குடி மாவட்ட நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்கம் சார்பில் அரசியல் ஆளுமைகளுக்கு பாராட்டு விழா, தூத்துக்குடி பாத்திமா நகர் சமுதாயக் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், மாவட்ட நாட்டுப்படகு மற்றும் பைபர் படகு மீனவர்கள் நலச்சங்க தலைவர் வி னோ ராஜ் , முத்துகுளித்துறைபரதவர் நலச்சங்க தலைவர் கனராஜ்,பாண்டியபதி பரதவர் சங்க தலைவர் அந்தோணிசாமி, அன்னை பரதர் நலச்சங்கதலைவர் சேவியர்வாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பரதவர் நலக்கூட்டமைப்புதலைவர்சேசையா வில்லவராயர் தலைமை



யில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாநிலங்களவை உறுப்பினர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்க்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது.இந்த பாராட்டு விழாவில் தமிழக வெற்றிக்கழக தெற்கு மாவட்ட செயலாளர் பிரைட்டர், மீனவ காப்போம் மக்கள் இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் தர்மராஜ், திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்படகு மீனவர்கள் சங்க தலைவர் எரிக் ஜூடு, தூத்துக்குடி மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ்,தமிழகவெற்றிக் கழக உடன்குடி ஒன்றிய செயலாளர் பத்ரி பிரசாந்த் உள்ளிட்ட பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். மேலும், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த கடலோர கிராம நிர்வாகக் குழு உறுப்பினர்கள்,தூத்துக்குடி பரதவர் நலச்சங்கம், முத்துகுளித்துறை பரதவர் நலச்சங்கம், பாண்டியபதி பரதவர் நலச்சங்கம் உள்ளிட்ட பல்வேறு மீனவர் நல அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களின் சேவைகளை பாராட்டி, மீனவர் சமூக நலன் மற்றும் கடலோர மக்களின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து இணைந்து செயல்பட உறுதிமொழி எடுக்கப்பட்டது.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.